442—

பொறியியல் கல்லூரி

***7358—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதியில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்றும், சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் ஐந்தும், ஆகமொத்தம் 6 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேற்படி கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்காக மொத்தம் 1960 இடங்கள் இருக்கின்றன. அவற்றில் 380 இடங்கள் காலியாக உள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மொத்த மாணவர் சேர்க்கைக்கான இடங்களில் 259 இடங்கள் காலியாக உள்ளன. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மாணவர்கள் அனைவரும் வசதியாகப் படிப்பதற்கு அந்த மாவட்டத்திலுள்ள கல்லூரிகளில் இடங்கள் இருப்பதால், புதியதாக கல்லூரி துவக்குவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைமகளும் மலைமகளும் போற்றும் தங்கத் தாயே! கச்சத் தீவை மீட்கப்போகும் நாளைய பாரதமே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது பூம்புகார் தொகுதி, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. எனவே, இங்கு படிக்கும் மாணவ மாணவியர்களுடைய கல்வி நலனைக் கருத்திற்கொண்டு, பொறியியல் கல்லூரி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

2013 மே 9]

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொறியியல் கல்லூரி உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், கிராமப்புறமாக இருந்தால் 10 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. பெருநகரப் பகுதியாக இருந்தால் 2½ ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது; அதோடுமட்டுமல்லாமல், கல்லூரி அமைய உள்ள இடம், போக்குவரத்து வசதி மற்றும் சுற்றுச்சூழல் போன்ற அடிப்படை வசதிகள் உள்ள இடமாக இருக்க வேண்டும். ஒரு பொறியியல் கல்லூரி துவக்குவதற்கு வைப்புத் தொகை ரூ.35 இலட்சம் செலுத்தப்பட வேண்டும். தொடரும் செலவினமாக, அதாவது ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுடைய ஊதியத் தொகைக்கு ரூ.33 கோடியே 54 இலட்சம் தேவைப்படுகிறது. கட்டடங்கள் கட்டுவது, தளவாடச் சாமான்கள் வாங்குவது, கணினி-Computer வசதிகள் ஏற்பாடு செய்வது, நூலக வசதி ஏற்பாடு செய்வது போன்ற தொடராச் செலவினத்திற்காக ரூ.93 கோடியே 63 இலட்சம் தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள பொறியியல் கல்லூரிக்குத் தேவையான இடம் அந்தப் பகுதியிலே கிடைக்கிறபட்சத்தில், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிலத்தைக் கையகப்படுத்தி அங்கு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆலோசிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் ஆண்டுதோறும் 10 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் அரசு பொதுத் தேர்விலே தேர்ச்சி பெற்று, உயர் கல்வி படிக்கும் நிலையில் உள்ளனர். இவர்கள் பொறியியல் கல்லூரிப் படிப்பை மேற்கொள்ள, எனது தொகுதியிலிருந்து 120 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள திருக்குவளைக்கோ அல்லது 145 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள திருச்சி அரசு பொறியியல்*

[2013 மே 9

கல்லூரிக்கோதான் செல்ல வேண்டிய நிலையுள்ளது. கல்விக்கு முன்னுரிமை அளித்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை எடுத்துச் சென்று, எனது தொகுதியிலே அரசு பொறியியல் கல்லூரி துவக்க ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 553 பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசு பொறியியல் கல்லூரிகள் என 7-ம், அரசு நிதி உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் என 3-ம், சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் என 525-ம், அண்ணா பல்கலைக்கழக உறுப்புப் பொறியியல் கல்லூரிகள் என 18-ம் ஆக மொத்தம் 553 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அரசிடம் இருக்கக்கூடிய இடங்களாக இருந்தாலும் சரி, சுயநிதிக் கல்லூரிகளின் நிருவாக ஒதுக்கீட்டின்கீழ் இருக்கக்கூடிய இடங்களாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பொறியியல் படிக்க விரும்பும் தகுதியுள்ள அனைத்து மாணவர்களும் சேர்வதற்கு ஏற்றவகையில் ஏற்கெனவே தமிழ்நாட்டில் அதிகப்படியான பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. இந்தியாவைப் பொறுத்தவரையில் 3,529 கல்லூரிகள் இருக்கின்றன. மற்ற மாநிலங்களை ஒப்பிடும்பொழுது இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் அதிகப்படியான, அதாவது, 553 பொறியியல் கல்லூரிகளைக்கொண்ட முதல் மாநிலம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள்தொகை அதிகமாக உள்ள உத்தரப்பிரதேச மாநிலத்தில்கூட 241 பொறியியல் கல்லூரிகள்தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைப்பார்கள் என்பதை அறிந்துதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், ஆட்சி அமைந்த 2 ஆண்டுகளில் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் தொடங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொல்லியிருக்கிற அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறபட்சத்தில், எதிர்காலத்தில்,

2013 மே 9]

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று மாண்புமிகு உறுப்பினர் கோரும் இடத்தில் பொறியியல் கல்லூரி துவக்குவதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 443, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 444, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

444—

மான் பூங்கா

*__22068__—**திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, சங்கர் நகர், கங்கைகொண்டான் பகுதியில் மான் பூங்காவை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி தொகுதி, சங்கர் நகர், கங்கைகொண்டான் பகுதியில் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு திட்டத்தின்கீழ் மான் பூங்காவினை அமைக்கும் திட்டத்தினை ஐந்தாண்டுகளில் நிறைவேற்றத்தக்க வகையில் ரூ.365 இலட்சத்திற்கு திட்டப் பிரேரணை ஒன்று அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மானம் பெரிது என்று வாழும் மனிதர்களை, மான் என்று சொல்வதில்லையா' என்பது புரட்சித் தலைவர்*